Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

# மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்தப் பாடசாலை

வாரம் - 22

பாடம்: தமிழ்மொழியும் இலக்கியமும்

தரம்: 11

தொகுப்பு இரா.யசந்தன்
கே/உந்துகொடை தமிழ் மகா வித்தியாலயம்

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக
- 1 தொடக்கம் 10 வரையான வினாக்கள் ஒவ்வொன்றின் கீழும் 1, 2, 3, 4 என்று இலக்கமிடப்பிடப்பட்டிருக்கும் தெரிவுகளில் சரியானது அல்லது மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க

---

1. கடவுள் இல்லை என வாதிடுபவன்
   1. ஆத்திகன் 2. நாத்திகன் 3. நைட்டிகன் 4. பக்தன்
2. வித்துக்குரிய பெயரைக்குறிக்கும் மணி என்ற சொல்லைப் பயன்படுத்தும் வழக்கம் அற்ற சொல்
   1. சோளம் 2. நெல் 3. தினை 4. மாதுளை
3. சொற்களின் பொருளை செய்யுள் வடிவில் திரட்டித்தரும் நூல்
   1. கலைக்களஞ்சியம் 2. அகராதி 3. நிகண்டு 4.நெடுங்கணக்கு
4. 60ஆம் ஆண்டு நிறைவில் கொண்டாடப்படுகின்ற விழா
   1. மணிவிழா 2. பொன்விழா 3. அமுதவிழா 4. மாணிக்கவிழா
5. வெளிப்படையான பொருளில் புகழ்ந்தும் மறைபொருளில் இகழ்ந்தும் கூறல்
   1. அறம்பாடுதல் 2. வஞ்சப்புகழ்ச்சி 3. சிலேடை 4. கீர்த்தி
6. வைக்கோல் அடுக்கிவைக்கப்பட்டிருப்பதை போர் எனப்படுவது போல புகையிலை அடுக்கிவைக்கப்பட்டிருப்பது
   1. கும்பல் 2 குவியல் 3. பாடம் 4.நிரை
7. அசுவம், அயம், பரி என்னும் பல சொற்கள் குறிக்கும் ஒரு பொருள்
   1. நரி 2. குதிரை 3. வேழம் 4. யாகம்
8. பெரியோர் சொல்லும் அறிவுரையைக் காது கொடுத்துக் கேட்க வேண்டும். காதுகொடுத்தல் என்ற மரபுத்தொடரின் பொருள்
   1. அருகில் இருந்து கேட்டல் 3. உதாசீனம் செய்தல் 4.அவதானித்தல்
   2. விளக்குதல்
9. வறுமை செல்வம் இரண்டையும் ஒன்றாக கருதும் பற்றற்ற நிலையினை உணர்த்தும் அருஞ்சொற்றொடர்
   1. எழுமையும் தொடரும் உழுவலன்பு
   2. குற்றங்களைந்து குணங்கொள்ளல்
   3. ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கல்
   4. தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்
10. கந்தையானாலும் கசக்கிக்கட்டு என்ற பழமொரிக்குப் பொருத்தமான மற்றோர் பழமொழி
    1. ஆறிலும் நூறிலும் சாவு
    2. இரக்கப்போனாலும் சிறக்கப்போ
    3. குப்பையில் போட்டாலும் குன்றிமணி மங்காது
    4. எடுப்பது பிச்சை ஏறுவது பல்லக்கு

பகுதி 2

1) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக

01. ‘‘இப்போ பகல் பொழுதுகளில் ஈத்திலைக் குப்பை மேட்டில் ஏறிநின்று உமணர்கள் ஓட்டுகின்ற உப்புவண்டியை எண்ணுறாங்க’’

1. இவ்வுரைப்பகுதி இடம்பெற்ற இலக்கியம் யாது?
2. உமணர்கள் எனப்படுவோர் யார்?
3. அவர்களது செயலாக கூறப்படுவது யாது?

02. ‘‘இப்போ இந்த மலையை பிரிவது மலையை விடக் கூடுதலாகக் கனக்கிறதே’’

1. இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?
2. மலை என குறிப்பிடப்படுவது யாது?
3. இக்கூற்றின் ஊடாக வெளிப்படுத்தப்படுவது யாது?